பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி – சென்னை

18 06 2018 12 40

திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது குறித்து விரிவான விவாதம் நடத்தப்படவேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக்கொண்டுள்ளார்.
2. ஜம்மு கஷ்மீரில் ஊடுருவ முயன்ற மேலும் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
3. துரிதமாக வளர்ந்து வரும் இந்தியா, 2025-ம் ஆண்டுக்குள் ஐந்து லட்சம் கோடி டாலர் ஈட்டும் பொருளாதார நாடாக மாறும் என்று குடியரசுத்தலைவர் திரு ராம்நாத் கோவிந்த் கூறியிருக்கிறார்.
4. தாலிபான்களுடன் போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அறிவித்துள்ள ஆப்கானிஸ்தானின் முடிவை இந்தியா வரவேற்றுள்ளது
5. உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளில் இன்று ஸ்வீடன்- தென்கொரியாவையும், பெல்ஜியம் - பனாமாவையும், இங்கிலாந்து – துனிசியாவையும் எதிர்கொள்கின்றன.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

{<<<>>>>}

நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவது குறித்து பரவலான விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நித்தி ஆயோக் ஆட்சிமன்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், இது குறித்து ஆலோசனைகளை வழங்குமாறு மாநில முதலமைச்சரை கேட்டுக் கொண்டார்.

ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடத்தினால் பல்வேறு வகையில் பயன் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்த நித்தி ஆயோக் துணைத் தலைவர் திரு ராஜீவ்குமார், எப்போது பார்த்தாலும் தேர்தல் நடக்கும் நிலையில் இருந்து மாற்றம் தேவையென பிரதமர் குறிப்பிட்டதாகவும், அனைத்து தேர்தலுக்கும் ஒரே வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும் என்று கூறியதாகவும் தெரிவித்தார்.

நித்தி ஆயோக் கடந்த ஆண்டு கூட்டத்தில், 2024 ஆம் ஆண்டு முதல் மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தல் நடத்தலாம் என்று யோசனை தெரிவித்திருந்தது.

இதன் மூலம் குறைந்தபட்ச பிரச்சாரம் மேற்கொள்ளவும், நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம் என்றும் நித்தி ஆயோக் கூறியிருந்தது. இந்த விஷயத்தை தேரதல் ஆணையம், சட்ட ஆணையம் ஆகியவை பரிசீலித்து வருகின்றன.

{<<<>>>>}

ஜம்மு காஷ்மீரில் ஊடுருவ முயன்ற மேலும் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வடக்கு காஷ்மீரில் பந்திப்போரா மாவட்டத்தில் இன்று காலை பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

இதையும் சேர்த்து சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே பனார் வனப்பகுதியில் தீவிரவாதிகளுக்கும், கூட்டு பாதுகாப்பு படையினருக்கும் இடையே புதிய துப்பாக்கி சண்டை நடந்தது.

{<<<>>>>}

விரைவான பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக கிரீஸ் சென்றுள்ள அவர், அங்குள்ள இந்திய சமுதாயத்தினர் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், இந்தியாவில் ஏராளமான வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன என்றார்.

இந்தியாவும் கிரீஸும் புகழ்பெற்ற கலாச்சாரங்களை கொண்ட நாடுகள் என்று கூறிய அவர், இருநாடுகளுக்கும் இடையே ஆழமான உறவுகள் நிலவி வருகிறது என்றார்.

இருநாடுகளும் ஜனநாயக மாண்புகளை மதித்து செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

தமது பயணம் இருநாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

கிரீஸில் உள்ள இந்திய சமுதாயத்தினர் இருநாடுகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முக்கிய பங்காற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கிரிஸில் உள்ள இந்திய சமுதாயத்தினர் கலாச்சார தூதுவர்களாக திகழ்வதாக குடியரசுத்தலைவர் குறிப்பிட்டார்.

இருநாட்டு மக்களுக்கும் இடையேயான தொடர்புகளை வலுப்படுத்த அவர்கள் மேலும் பங்களிப்பை வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இன்று அந்நாட்டு அதிபர் திரு **Prokopis Paviopoulos,** பிரதமர் திரு. **Alexis Tsipras** எதிர்க்கட்சித் தலைவர் திரு **Kyriakos Mitsotakis** ஆகியோரை சந்தித்து குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த் பேச்சு நடத்தவுள்ளார்.

{<<<>>>>}

அசாம் மாநிலம் கவுஹாத்தியில் அமைக்கப்படவுள்ள புற்றுநோய் சிகிச்சை மையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பிஜேபி தலைவர் திரு அமித் ஷா இன்று பங்கேற்கிறார்.

அம்மாநில முதலமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், தொழில் அதிபர் திரு ரத்தன் டாடா உள்ளிட்டோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர்.

மாநிலம் முழுவதும் 19 புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும் என்று அசாம் சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வாஸ் சர்மா கூறியுள்ளார்.

இந்த சிகிச்சை மையங்களை மாநில அரசு மற்றும் டாடா அறக்கட்டளை ஆகியவை இணைந்து ஏற்படுத்தவுள்ளன.

{<<<>>>>}

சர்வதேச யோகா தினம் வரும் வியாழக்கிழமை கொண்டாடப்பட உள்ள நிலையில் தென்னாப்பிரிக்காவில் நான்கு இடங்களில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு யோகா பயிற்சியில் ஈடுப்பட்டனர்.

ஜோகன்னஸ்பர்கில் கடந்த சனிக்கிழமை ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வாண்டரர்ஸ் மைதானத்தில் குழுமி பயிற்சியில் ஈடுபட்டதாக இந்திய துணைத்தூதர் திரு கே ஜி சீனிவாசா தெரிவித்தார்.

டர்பனில் இந்திய துணை தூதரகமும், சிவானந்தா உலக அமைதி அறக்கட்டளையும் யோகா பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

125 ஆண்டுகளுக்கு முன்பு, மகாத்மா காந்தி தமது சத்தியாகிரக போராட்டத்தை தொடங்கிய பீட்டர்மாரிட்ஸ்பர்க் மற்றும் ஸ்டேங்கர் நகரங்களிலும் யோகா பயிற்சிகள் நடைபெற்றன.

{<<<>>>>}

நான்கு நாடுகள் பயணத்தின் முதல்கட்டமாக வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஷ்மா சுவராஜ் நேற்று இத்தாலி சென்றடைந்தார்.

இம்மாதம் முதல் தேதி இத்தாலியின் புதிய பிரதமராக திரு கியுசிபே கான்டே பதவி ஏற்றப்பின் இந்தியா-இத்தாலி இடையேயான அரசியல் கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெற இருப்பது இதுவே முதல் முறையாகும்.

இத்தாலி தலைநகர் ரோம் சென்றுள்ள திருமதி சுஷ்மா சுவராஜ், அங்கு அந்நாட்டு பிரதமர் திரு கான்டே, வெளியுறவு அமைச்சர் திரு என்சோ மாவேரோ மிலான்சி ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் பற்றி பேச்சு நடத்துவார்.

பின்னர் இன்று பிரான்ஸ் செல்லும் அவர், அங்கு இரண்டு நாட்கள் தங்கியிருப்பார்.

நாளையும் நாளை மறுநாளும் லக்சம்பார்க்கில் பயணம் மேற்கொள்ளும் திருமதி சுஷ்மா சுவராஜ், அதன் பின்னர், பெல்ஜியம் செல்லவுள்ளார்.

23ம் தேதிவரை 4 நாட்களில் பெல்ஜியத்தில் பயணம் மேற்கொள்ளும் அவர், சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

திருமதி சுஷ்மா சுவராஜின் ஐரோப்பிய நாடுகள் பயணம் அந்த நாடுகளுக்கு இடையேயான நல்லுறவையும் ஒத்துழைப்பையும் மேலும் அதிகரிக்க உதவும் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

{<<<>>>>}

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்யவர்தன்
ரத்தோர் புதுதில்லியில் இன்று ஐரோப்பிய யூனியன் நாடுகளின் திரைப்படவிழாவை தொடங்கி வைக்கிறார்.

புதுதில்லியில் உள்ள சிரி கோட்டை வளாகத்தில் இன்று இதற்கான விழா நடைபெறுகிறது.

ஐரோப்பிய யூனியன் அமைப்பை சேர்ந்த 23 நாடுகளின் 24 அண்மைக் கால திரைப்படங்கள் இந்த திருவிழாவின்போது திரையிடப்படும்.

புதுதில்லி, சென்னை உள்ளிட்ட 11 நகரங்களில் ஆகஸ்ட் 31-ம் தேதி வரை இந்த திரைப்படவிழா நடைபெறும் என்று அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் திரைப்பட திருவிழா இயக்குனரகமும், ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதரகங்களும் இணைந்து இந்த விழாவுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளன.

{<<<>>>>}

ஆப்கானிஸ்தானில் சண்டை நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அந்நாட்டு அதிபர் திரு அஷ்ரப் கனி அறிவித்துள்ளதற்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது.

அந்நாட்டு அரசின் இந்த அறிவிப்புக்கு தீவிரவாதக் குழுவினர் ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரவீஷ்குமார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆப்கான் மக்களின் நீண்ட கால துயரங்களை போக்குவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் அந்நாட்டு அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

{<<<>>>>}

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

பாரக் பள்ளத்தாக்கை சேர்ந்த மூன்று மாவட்டங்களில் நிலைமை இன்னும் சீரடையவில்லை என்றும், 6 மாவட்டங்களை சேர்ந்த நான்கரை லட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கச்சார், கரீம்கன்ச், கைலகந்தி, மாவட்டங்களில் 6 ஆயிரத்திற்கும் மேலான மக்களை தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் மீட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வீடு மற்றும் உடைமைகளை இழந்த மக்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்க பட்டுள்ளனர்.

அவர்களுக்கு தேவையான உணவு, உடை, குடிநீர் போன்ற பொருட்களை மாநில அரசு அளித்து வருகிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அம்மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு கேஷப் மகந்தா மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

இதனிடையே மணிப்பூர் மாநிலத்திலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை அம்மாநில முதலமைச்சர் திரு பைரேன் சிங் மற்றும் அதிகாரிகள் சந்தித்து பேசினர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய திரு பைரேன் சிங் தாம் உள்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்கிடம் வெள்ள நிலைமை குறித்து பேசியுள்ளதாகவும், பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்க வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள், சாலை போன்றவற்றை சீரமைக்க நிவாரண உதவி வழங்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

உள்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், உதவிகளை வழங்குமாறு அவரது செயலாளருக்கு உதவிகளை விரைந்து வழங்கும்படி பணித்திருப்பதாகவும், திரு பைரேன் சிங் மேலும் கூறினார்.

{<<<>>>>}

நாகாலாந்தின் மோன் மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அசாம் ரைபிள் படை பிரிவை சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். 4 பேர் காயமடைந்தனர்.

அபோய் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது தீவிரவாதிகள் தாக்கியதாக அசாம் ரைபிள் படை பிரிவின் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் இந்த தாக்குதலுக்கு பாதுகாப்பு படையினர் தகுந்த பதிலடி கொடுத்தனர்.

{<<<>>>>}

ஜப்பானின் ஒசாக்கா நகரை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியதில் மூன்று பேர் உயிரிழந்தனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடலில் 13 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவையில் 6 புள்ளி ஒன்றாக இருந்தது.

நிலநடுக்கம் காரணமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

{<<<>>>>}

ரஷ்யாவில் நடைபெற்றுவரும் உலக கால்பந்து போட்டித்தொடரில் இன்று மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இந்திய நேரப்படி மாலை மணி 5 – 30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஸ்வீடன் - தென்கொரிய அணிகள் மோதுகின்றன.

இரவு மணி எட்டு முப்பதுக்கு நடைபெறும் ஆட்டத்தில் பெல்ஜியம் - பனாமாவை எதிர்கொள்கிறது.

இரவு மணி 11 – 30-க்கு தொடங்கும் ஆட்டத்தில் துனிசியா - இங்கிலாந்து அணிகள் விளையாடுகின்றன.